**செய்தி வெளியீடு எண் : 039** **நாள்: 07.01.2022**

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை

2021ம் ஆண்டிற்கான தொழிலாளர் நல நிதி செலுத்தக் கோரும் அறிவிப்பு

தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் 1972-ன்படி தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு தொழிலாளர்களுக்கென பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தொழிலாளர் நல நிதிச் சட்டம் பிரிவு 2(டி)-ன்படி தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், மலைத் தோட்ட நிறுவனங்கள், ஐந்தும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் கடைகள் மற்றும் உணவு நிறுவனங்களில் பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளிக்கும், தொழிலாளியின் பங்காக ரூ.10/-, ஒவ்வொரு தொழிலாளிக்கும் வேலையளிப்பவர் பங்காக ரூ.20/-ம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.30/-வீதம் தொழிலாளர் நல நிதி பங்குத் தொகையாக நிர்வாகம் செலுத்த வேண்டும். அதன்படி 2021-ம் ஆண்டிற்கான தொழிலாளர் நல நிதியை 31.01.2022க்குள் வாரியத்திற்கு செலுத்த வேண்டும். தொழிலாளர் நல நிதி பங்குத் தொகை உயர்த்துதல் தொடர்பான அரசாணை வெளியிடும்பட்சத்தில் நல நிதி பங்குத் தொகை மற்றும் அதன் அமலாக்க தேதி பின்னர் அறிவிப்பு செய்யப்படும்.

வருடத்தில் 30 நாட்களுக்கு மேல் பணிபுரிந்த அனைத்து வகை தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் நல நிதி செலுத்த, வேலையளிப்பவர் கடமைப்பட்டவராவார்.

தொழிலாளர் நல நிதி செலுத்தத் தவறினால் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் 28ன்படி வருவாய் வரி வசூல் சட்டத்தின் கீழ் (Revenue Recovery Act) அத்தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும். எனவே 2021ம் ஆண்டிற்கான தொழிலாளர் நல நிதித் தொகையினை 31.01.2022 தேதிக்கு முன்பாக செயலாளர், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், டி.எம்.எஸ். வளாகம், தேனாம்பேட்டை, சென்னை-600 006 என்ற முகவரிக்கு "The Secretary,Tamil Nadu Labour Welfare Board,Chennai-600006" என்ற பெயருக்கு வங்கி வரைவோலையாக அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

செயலாளர்
தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்
சென்னை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**